# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | MC No.03/2024 | Date: 06.11.2025 |
| Deposition of Witness for | : | **ம.சா.1** | |
| Name | : | **மெய்யானந்தி** | |

**குறுக்கு விசாரணை :-**

1) எனது பெற்றோர்கள் எனக்கு திருமணத்தின்போது 10.5 பவுன் தங்க நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்கள் செய்தார்கள் என்றால் சரிதான். எனது கணவர் எனக்கு திருமணத்தின்போது 4.5 பவுன் தாலி கொடி மற்றும் அரை பவுன் மோதிரம் செய்தார் என்றால் 3.5 பவுன் தாலி கொடி மட்டும் செய்தார். திருமண செலவுகளை எனது கணவர் தான் முழுமையாக செய்தார் என்றால் இல்லை, இருவீட்டாரும் பாதி பாதி செய்தோம். நான் சொல்வது தவறு என்றும், திருமண செலவுகளை எனது கணவர் வீட்டார் தான் செய்தார்கள் என்றால் சரியல்ல.

2) திருமணத்திற்கு பின்னிட்டு நானும், எனது கணவரும் எத்தனை வருடங்கள் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் 1 வருடம் 9 மாதங்கள் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்திருப்போம். மேற்படி, சேர்ந்து வாழ்ந்த காலக்கட்டத்தில் வாரத்திற்கு இருமுறை பவானியில் உள்ள எனது பெற்றோரின் வீட்டிற்கு செல்வது வழக்கம் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர் தான் என்னை அழைத்துகொண்டு எனதுபெற்றோரின் வீட்டில் விட்டுவிட்டு வந்துவிடுவார், திரும்ப வந்து கூட்டிவரமாட்டார். திருமணத்திற்கு பின்னிட்டு நான் எனது தந்தையின் வீட்டில் அடிக்கடி சென்றுவிடுவேன் என்றும், எதிர்மனுதாரர் தான் என்னை அழைத்து வந்து குடும்பம் நடத்தி வந்தார் என்றால் சரியல்ல.

3) திருமணத்திற்கு எத்தனை வருடங்கள் கழித்து நான் கருவுற்றேன் என்றால் 01 வருடம் 06 மாதங்கள் கழித்து ஆனேன். நான் திருமணத்திற்கு பின்னிட்டு கர்ப்பம் ஆகவில்லை என்று எனது கணவரை எனது தந்தை தகாத வார்த்தையால் திட்டினார் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரரின் தாயார் தான் என்னை திட்டினார். தனி குடித்தனம் வைத்தால் தான் என்னை எதிர்மனுதாரருடன் வாழ வைப்பேன் என்று எனது தந்தை கூறினார் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரரின் தந்தை தான் வீட்டு பொருட்கள் வாங்கி கொடுத்து எங்களை தனிக்குடித்தனம் வைத்தார். எதிர்மனுதாரர் தனிக்குடித்தனம் செல்ல சம்மதம் தெரிவித்ததால் தான் என்னை எனது தந்தை அனுப்பி வைத்தார் என்றால் சரியல்ல. ஏற்கனவே, கூட்டு குடும்பமாக வாழ்ந்த வீட்டின் ஒரு பகுதியை தான் நாங்கள் தனிக்குடித்தனம் செய்தோம் என்றால் எனது மாமனார் வீட்டை ஒட்டி உள்ள ஒரு வீட்டில் தான் தனிக்குடித்தனம் இருந்தோம்.

4) தனிக்குடித்தனம் சென்ற பின்னிட்டு எனது கணவர் வேலைக்கு சென்று நல்ல முறையில் தான் குடும்பம் நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. தனிக்குடித்தனம் சென்ற பின்னரும் வாரத்திற்கு ஒருமுறை எனது தந்தையின் வீட்டிற்கு சென்றுவிடுவேன் என்றால் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை காலையில் சென்றுவிட்டு மாலையில் மீண்டும் வீட்டிற்கு வந்துவிடுவேன். திருமணத்திற்கு பின்னிட்டு கூட்டு குடும்பமாக வாழ்ந்த சமயத்திலும், தனிக்குடித்தனமாக வாழ்ந்த சமயத்திலும் நான் அடிக்கடி எனது பெற்றோரின் வீட்டிற்கு சென்று விடுவேன் என்றும், அந்த சமயத்தில் எதிர்மனுதாரரின் தாயார் தான் எதிர்மனுதாருக்கு சமையல்

செய்து அவரை கவனித்து வந்தார் என்றால் சரியல்ல, நானும், எதிர்மனுதாரரும் அவரின் தாயாரிடம் பேசமாட்டோம்.

5) நான் கருவுற்று, வளைகாப்பு விழா வரையிலும் நானும், எதிர்மனுதாரரும் ஒன்றாக தான் குடும்பம் நடத்தினோம் என்றால் சரிதான். நான் கருவுற்று, வளைகாப்பு விழா வரையிலும் எனது கணவர் தான் எனது மருத்துவ செலவுகளை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல, எனது தந்தை மற்றும் தம்பி தான் பார்த்து வந்தார்கள். நான் சொல்வது தவறு என்றும், நான் கருவுற்று, வளைகாப்பு விழா வரையிலும் எனது கணவர் தான் பவானி கவின் மருத்துவமனையில் மருத்துவ செலவுகளை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. மருத்துவ ஆவணங்களை நான் தான் எடுத்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல, நான் கருவுற்றதில் இருந்து தேவூர் அரசு மருத்துவமனையில் தான் மருத்துவ பரிசோதனை செய்தேன்.

6) வளைகாப்பு செலவுகளை எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் சரியல்ல, எனது பெற்றோர்கள் தான் செய்தார்கள். நான் சொல்வது தவறு என்றும், வளைகாப்பு செலவுகளை எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் சரியல்ல. வளைகாப்பு விழா எதிர்மனுதாரரின் வீட்டில் தான் நடந்தது என்றால் சரிதான். எனக்கு குழந்தை பிறந்து Discharge ஆகும் வரையில் ஆன செலவுகளை எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்து 07 மாதம் காலம் வரையில் எதிர்மனுதாரர் எனது பெற்றோரின் வீட்டிற்கு வந்து குழந்தையை வாரம் ஒருமுறை பார்த்துவிட்டு செல்வார் என்றால் சரியல்ல.

7) குழந்தை பிறந்து 08 வது மாதத்தில் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றால் 07 மாதம் முடிந்தவுடன் வந்து ஒரு வாரம் எதிர்மனுதாரர்

வீட்டிற்கு வந்தேன், அதன்பிறகு என்னையும், எனது குழந்தையையும் வெளியே அனுப்பி விட்டார்கள். நான் எனது குழந்தையை சரியாக பராமரிக்காததால் தான் எனக்கும், எனது பாட்டிக்கும் வாய்தகராறு ஏற்பட்டது என்றும், அதனால் நான் கேட்டுகொண்டதற்கு இணங்க எதிர்மனுதாரர் என்னை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் அண்ணன் மனைவி சொன்னதன் பேரில் எதிர்மனுதாரருககு வேறு ஒரு பெண்ணுடன் தகாத உறவு இருப்பதாக நான் சண்டைபோட்டேன் என்றால் சரியல்ல, எனக்கு நேரடியாகவே தெரியும்.

8) எனக்கும், எதிர்மனுதாரருக்கும் வாய்தகராறு வந்தபோது எதிர்மனுதாரரின் அம்மாவை அடித்துவிட்டு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல, எனது மாமியார் தான் என்னை அடித்தார். எனது குழந்தைக்கு மொட்டை அடிப்பதற்கு எதிர்மனுதாரர் எனது தந்தையிடம் குழந்தையை எடுத்து வருமாறு சொன்னார் என்றால் சரியல்ல, எங்கள் வீட்டில் இருந்து தான் எதிர்மனுதாரரின் வீட்டிற்கும், அவரது சித்தப்பா வீட்டிற்கும் சென்று அழைக்க சென்றோம், அப்போதும் என்னை வீட்டிற்கே வரவிடவில்லை.

9) பொதுவாக, கணவரின் வீட்டு குலதெய்வ கோவிலில் தான் குழந்தைக்கு மொட்டை அடிப்பது வழக்கம் என்றும், எனது பெற்றோரின் கோவிலில் அடிக்க மாட்டார்கள் என்றால் எனது கணவரின் குலதெய்வ கோவிலில் தான் மொட்டை அடித்தோம். கடந்த 30-05-2023ம் தேதி, சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எனது கணவர் வரதட்சணை கேட்டதாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல, சேர்ந்து வாழத்தான் புகார் கொடுத்தேன். நான் சொல்வது தவறு என்றும்,

எனது கணவர் வரதட்சணை கேட்டதாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

10) புகார் கொடுத்த அன்றே எனது தாய்மாமா எதிர்மனுதாரரின் வீட்டிற்கு வந்து எனது பொருட்களை எடுத்து வந்துவிட்டார் என்றால் சரியல்ல, எனது மாமியார் தான் பொருட்களை எடுத்து ரோட்டில் வைத்திருந்தார், அதனால் நாங்கள் சென்று எடுத்துகொண்டு வந்துவிட்டோம். எதிர்மனுதாரர் தான் எனக்கும், எனது குழந்தையையும் பாராமரிக்க ஆகும் செலவுகளை செய்து வந்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழச்சொல்லி HMOP NO.37/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் செய்து வந்த மினரல் வாட்டர் தொழில் நஷ்டம் ஏற்பட்டதால் தற்போது கூலி வேலைக்கு தான் சென்று வருகிறார் என்றால் சரியல்ல.

11) எனக்கு பூர்வீக சொத்து எவ்வளவு உள்ளது என்றால் எனது தந்தைக்கு தான் பூர்வீக சொத்து அரை ஏக்கர் நிலம் உள்ளது, அதிலும் இரண்டு நபர்களுக்கு பங்கு உள்ளது. எதிர்மனுதாரர் கூலி வேலைக்கு சென்று மாதம் ரூ.12,000/-ம் சம்பாதித்து வருகிறார் என்றும், அதனை வைத்து தான் அவரது பெற்றோரை பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல, அவருக்கு வீட்டு வாடகையின் மூலம் மாதம் ரூ.2 லட்சம் தொகையும், நிலம் வாங்கி விற்கும் தொழிலை அவரும், அவரது தந்தையும் செய்து வருவதன் மூலமாகவும் வருமானம் வருகிறது.

12) எதிர்மனுதாரருக்கு வீட்டு வாடகையின் மூலம் மாதம் ரூ.2 லட்சம் தொகை வருமானம் வருகிறது என்பதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் ரூ.10 லட்சம் தொகை வைத்து வட்டிக்கு விடும் தொழில் செய்து வருவதாக சொல்வது பொய் என்றால்

சரியல்ல. எதிர்மனுதாரர் 10 பவுன் நகையும், ரூ.1லட்சம் தொகை கேட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு கோமதி என்ற பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் டெய்லரிங் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, நான் மிதியடி செய்யும் தொழில் செய்து வருகிறேன், எனது தந்தையும், தாயும் கூலிவேலைக்கு சென்று அதில் வரும் வருமானத்தை வைத்து தான் என்னையும், எனது குழந்தையின் பராமரிப்பு செலவுகளை பார்த்து வருகிறார்கள்.

13) நான் மிதியடி செய்யும் தொழிலின் மூலமாக எனக்கு மாதம் ரூ.10,000/- வருமானம் வருகிறது என்றால் சரியல்ல, ஒரு மிதியடி செய்தால் ரூ.3 தான் வருமானம் வரும். எதிர்மனுதாரர் மற்றும் அவரின் பெற்றோர் வரதட்சணை கேட்டார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் ஜீவனாம்சம் கேட்ட தொகை அதிகமாக உள்ளதால், எனது மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Meyyanandhi